# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 21/மா/2023**
**நாள் : 09.02.2023**

திரு. G.M. சங்கர்,
சென்னை – 600 091. – முறையீட்டு மனுதாரர்

தலைமைப் பொறியாளர்,
பூங்காத் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை – 600 003. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, மடிப்பாக்கம், லெஷ்மி நகர் பிரதான சாலை, எண்.57B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G.M. சங்கர் என்பவரின் 24.01.2023 நாளிட்ட மனு 30.01.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 21/2023 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, மடிப்பாக்கம், லெஷ்மி நகர் பிரதான சாலை, எண்.57B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G.M. சங்கர் தனது முறையீட்டு மனுவில்,

"சென்னை பெருநகர மாநகராட்சியில் பொதுப் பூங்கா 525 உள்ளதாக தகவல்கள் இணையதளத்தில் உள்ளன. கடந்த 2019ல் வருடமே சென்னை பெருநகர மாநகராட்சியால் பராமரிக்கப்படும் 255 பூங்காக்களில் மழைநீர் சேகரிக்கும் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கான தகவலை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் பெறப்பட்டது. அதன் அடிப்படையில் / மண்டல 1,2,3,4,6 7, 8, 10, 12, 14 மற்றும் 15 அலுவலர்கள் மட்டும் தகவல் அளித்துள்ளனர். அதனடிப்படையில் எங்கெல்லாம் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பூங்காக்களில் அமைக்கப்படவில்லையோ உடனடியாக அதனை நிறுவினால் பருவ மழைக்காலங்களிலும், மேக வெடிப்பு மழையிலும், சாலையில் மழைநீர் வெள்ளமாக கரைபுரண்டு ஓடும் நிலைமை சற்று குறையும். மேலும் பூங்காக்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துவதன் மூலம் பூங்காக்களுக்கு அருகிலுள்ள குடியிருப்பு பகுதிகளின் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து நீர் தட்டுப்பாடு எழாது என்று

கடந்த 07.01.2022 புகார் அளித்திருந்தும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. இதனால் மழைக்காலங்களில் நிலத்தடி நீராக தேக்கி வைக்க வேண்டிய பாதியளவு மழைநீர் வீணாகிவிட்டது.

ஆகையால் உடனடியாக மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு இல்லாத சென்னை பெருநகர மாநகராட்சி பூங்காக்களில் மேற்படி வசதியினை நிறுவாமல், சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யாமல் விட்ட அலுவலரின் மீது தக்க சட்ட நடவடிக்கைகள் எடுக்குமாறு பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சியின் கண்காணிப்புப் பொறியாளரிடம் (பூங்கா துறை) கோரப்பட்டது. அவர் தனது 03.02.2023 நாளிட்ட அறிக்கையில்:-**

1. புகார்தாரர் திரு. G.M. சங்கர், வழக்குரைஞர், மாநில சட்டப் பிரிவு ஆம் ஆத்மி கட்சியின் உறுப்பினர் 27.01.2023 தேதியிட்ட புகார் மனுவில் பருவ மழை காலத்தில் மழை நீரை சேமிக்கும் விதமாக பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காக்களில் மழை நீர் சேமிப்பு அமைப்புகளை அமைத்திட தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளில் முறைமன்ற நடுவண் மூலமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உத்திரவிடக் கோரி புகார் மனுவை அளித்துள்ளார்.
2. பதிவு செய்யப்பட்ட (புகார் எண்.21/C/2023) புகாரின் மீது சம்மந்தப்பட்ட உரிய ஆவணங்களுடன் எழுத்துப்பூர்வ அறிக்கையை சமர்ப்பிக்கிறேன்.
3. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பசுமை போர்வையை அதிகரிக்க பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக இது நாள் வரை 786 பூங்காக்கள், 104 சாலை மைய தடுப்புகளும் மற்றும் 113 போக்குவரத்து தீவுத்திட்டுகள் உருவாக்கி பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் பூங்காக்களில் இந்திய பாரம்பரிய வகையான மரங்கள் நடப்பட்டு வருகின்றது. இதன் மூலம் மாசு இல்லாத காற்று சுவாசிக்கவும், மக்களுக்கு பொழுது போக்குவதற்கு மற்றும் குழந்தைகள் பாதுகாப்பாக விளையாடவும் பயன்படுகிறது.
4. பெருநகர சென்னை மாநகராட்சியில் இதுவரை 786 பூங்காக்களில் 1619 மழை நீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் இனி வருங்காலங்களில் புதிதாக அமைக்கப்படவுள்ள பூங்காக்களிலும், இத்திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போதுள்ள பூங்காக்களில் 6 குளங்கள் பராமரிக்க உள்ளது.
5. பெருநகர சென்னை மாநகராட்சியில் முதற்கட்டமாக சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் மூலமாக ஏற்கனவே உள்ள பூங்காக்களில் 57 ஸ்பான்ச் பார்க் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் மூன்று மாதங்களுக்குள்ளாக பணிகள் முடிக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இதன்

காரணமாக அப்பகுதியில் மழை காலத்தில் கணிசமான அளவு நிலத்தடி நீர்மட்டம் உயர்வதற்கான வாய்ப்புகள் உள்ளன.

6. மேலும், இதன் தொடர்ச்சியாக வரும் காலத்தில் ஸ்பான்ச் பார்க் அமைக்கும் சாத்திய கூறுகள் உள்ள பூங்காக்கள், வரும் பருவ மழை காலம் தொடங்குவதற்கு முன்பாக அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எனவே தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் மன்றத்தில் தாக்கல் செய்த எழுத்துப்பூர்வ அறிக்கையை ஏற்று, இந்த மாண்புமிகு தீர்ப்பாயம் பொருத்தமானது மற்றும் சரியானது என்று கருதும் தகுந்த உத்தரவு அல்லது உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டப்படுகிறது.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 06.02.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 06.02.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

“பெருநகர சென்னை மாநகராட்சியில் பொதுப்பூங்கா 525 உள்ளதாக தகவல்கள் இணையத்தில் உள்ளன. 2019ம் ஆண்டில் சென்னை பெருநகர மாநகராட்சியால் பராமரிக்கப்படும் 255 பூங்காக்களில் மழைநீர் சேகரிக்கும் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கான தகவல்கள் தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் பெறப்பட்டது. அதன் அடிப்படையில் ஒரு சில மண்டல அலுவலர்கள் அதாவது 1,2,3,4,6,7,8,10,12,14 மற்றும் 15 அலுவலர்கள் மட்டுமே தகவல் அளித்துள்ளனர். அதன் அடிப்படையில் எங்கெல்லாம் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பூங்காக்களில் அமைக்கப்படவில்லையோ அங்கெல்லாம் உடனடியாக அதனை நிறுவினால் பருவ மழைக் காலங்களில் சாலைகளில் மழைநீர் வெள்ளமாக கரைபுரண்டு ஓடும் நிலைமை சற்று குறையும். மேலும் பூங்காக்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துவதன் மூலம் பூங்காக்களுக்கு அருகில் உள்ள குடியிருப்பு பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து நீர் தட்டுப்பாடு எழாது. எனவே, மழைநீர் கேசரிப்பு கட்டமைப்பு இல்லாத சென்னை பெருநகர மாநகராட்சி பூங்காக்களில் மழை நீர் சேகரிப்பு வசதியினை ஏற்படுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மழைநீர் சேகரிப்பு அமைப்பை பூங்காக்களில் நிறுவிட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கடந்த 7.1.2022 அன்று மனு அனுப்பப்பட்டும், அதன் மேல் மாநகராட்சியால் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வு தொடர்பாக சென்னை மாநகராட்சிக்கு என்னால் அனுப்பப்பட்ட மனுக்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

**பெருநகர சென்னை மாநகராட்சியின் உதவி செயற் பொறியாளர் 06.02.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :**

“பெருநகர சென்னை மாநகராட்சியில் இதுவரை 786 பூங்காக்களில் 1619 மழை நீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் புகைப்பட நகல்கள் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் இனி வரும் காலங்களில் புதிதாக அமைக்கப்படவுள்ள பூங்காக்களில் இத்திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை தெரிவித்து அதன் புகைப்பட நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம். அனைத்து பூங்காக்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை இன்னும் 4 மாத காலத்தில் நிறுவப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சிப் பூங்காக்களில் 57 ஸ்பான்ஞ் பார்க் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக ஸ்பான்ஞ் பார்க் அமைக்கும் சாத்தியக் கூறுகள் உள்ள பூங்காக்களில் தொடங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வு தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காக்களின் கண்காணிப்புப் பொறியாளரின் 3.2.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி பூங்கா துறை உதவி செயற் பொறியாளரின் வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி, பூங்கா துறையின் கண்காணிப்புப் பொறியாளரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

மனுதாரர், பெருநகர சென்னை மாநகராட்சி – பூங்காத் துறையின் பராமரிப்பில் உள்ள பூங்காக்களில் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் ஏற்படுத்த வேண்டும் என்று தன்னுடைய மனுவில் கோரியுள்ளார்.

2. மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளது போல, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சில மண்டல அலுவலர்கள் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு வசதிகள் குறித்து தகவல் அளிக்கவில்லை என்பது அறிய முடிகிறது. மேலும் மனுதாரர், 7.1.2022 நாளிட்டு பெருநகர சென்னை மாநகராட்சி, பூங்காத் துறைக்கு அளித்த மனுவிற்கு இதுகாறும் பதில் அளிக்காதது, பூங்காத் துறையின் அலுவலர்களின் மெத்தனப்போக்கே என்று இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. பெருநகர சென்னை மாநகராட்சி இதுவரை 786 பூங்காக்களில் 1619 மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட்டுள்ளதும், அனைத்து பூங்காக்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை இன்னும் 4 மாத காலத்தில் நிறுவப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காக்களில் ரூ.767/- கோடி திட்ட மதிப்பீட்டில் 57 ஸ்பான்ஞ் பார்க் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதும், பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போதுள்ள பூங்காக்களில் 6

குளங்கள் பாராமரிக்க உள்ளது என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி – பூங்காத் துறையின் உதவி செயற் பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் தலைமைப் பொறியாளரின் அறிக்கை ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

**பரிசீலனைக்குப்பின் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:–**

பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காத் துறை பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் உள்ள பூங்காக்களில் அதிக அளவு மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைப்பதும், மற்றும் 57 ஸ்பான்ச் பார்க் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலங்களில் அமைக்கவும், அதற்கான திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு இருப்பதும் பாராட்டுக்குரியது ஆகும். ஆனால் அதே சமயம் இவ்வாறு அமைக்கப்படும் அல்லது ஏற்கனவே அமைக்கப்பட்ட மழைநீர் சேகரிப்பு தொட்டியினால் ஏற்படும் நன்மைகள் குறித்து ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் மதிப்பீடுகள் (evolution) கணக்கீடு செய்யப்பட வேண்டும் என்றும் மாதந்தோறும் மண்டல அலுவலர்களிடமிருந்து பூங்காக்களை பராமரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை பெறவும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும், மாதந்தோறும் பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காத்துறை அலுவலர்களால், ஒவ்வொரு மண்டலத்திலும் அமைக்கப்பட்ட மழைநீர் சேகரிப்பு தொட்டிகள், குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அதன் அறிக்கையினை பெருநகர சென்னை மாநகராட்சி இணையத்தளத்தில் பொது மக்கள் / சமூக ஆர்வலர்கள் தெரிந்துக்கொள்ள ஏதுவாக பதிவேற்றம் செய்யப்பட வேண்டும் என்றும், பெருநகர சென்னை மாநகராட்சி, பூங்காத் துறை உதவி செயற் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு எல்லா பூங்காக்களிலும் இன்னும் 4 மாதங்களுக்குள் மழைநீர் சேகரிப்புத் தொட்டி அமைக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காத் துறை தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

The Commissioner, Greater Chennai Corporation is directed to launch a fillip in the implementation of Rain Water Harvesting (RWH) programme covering all its parks by holding regular reviews with the Deputy Commissioners and Assistant Commissioners of the Corporation Zones. Rain Water Harvesting as a concept and a programme has gained momentum in our State, ever since 2000, due to the earnestness of the Government even by incorporating Rain Water Harvesting as mandatory provision while according planning approval for construction of buildings. This being so the Corporation cannot afford to lag behind in the complete implementation of the programme in all its parks by setting an example to the citizens to continue to be passionate and involved in Rain Water Harvesting efforts both at home and outside, while it is heartening to know that the Great Chennai Corporation has allocated specific funds for Rain Water Harvesting compliance in the Parks' Budget the Local Body has to also ensure its effective and wholehearted execution in a systematic and timely manner. The Forum appreciates the petitioner for bringing the issue to the notice that contains a noble, water conserving and socially relevant

welfare programme of Rain Water Harvesting that would supply an essential need of water during deficit summer periods and function as a vital supplement to the Chennai Metropolitan Water Supply and Sewerage Board's hydel storage and desalination. The groundwater potential around the Corporation parks would also receive a substantial boost once Rain Water Harvesting is in place in a robust manner. The Commissioner Greater Chennai Corporation is urged to pursue the goal with personal interest to ensure its importance among the Park personnel staff and officers.

2023–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 9–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. G.M. சங்கர்,
எண்.57B, லஷ்மி நகர் பிரதான சாலை,
மடிப்பாக்கம், சென்னை – 600 091.

2) அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

3) தலைமைப் பொறியாளர்,
பூங்காத் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

4) கண்காணிப்பு பொறியாளர், (பூங்கா)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

5) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

13/2/23

செயலாளர்.

13/2/23

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032